Check Point Threat Extraction secured this document

Get Original


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2403/53 - 2024 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2024.09.27

*2403/53 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசிலமைப்பு**

**அறிவித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையையும் அமைச்சுக்களின் எண்ணிக்கையையும் அத்தகைய அமைச்சர்களுக்குரிய விடயங்கள் மற்றும் பணிகள், திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் ஆகியவற்றைச் சாட்டுதல் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாதலால்,

பல்வேறு அமைச்சர்களின் பொறுப்பிலுள்ள விடயங்கள், பணிகள், திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் என்பன இந்த அறிவித்தல் திகதியிலிருந்து, இங்கு கீழ் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பெற்றவாறு அமைந்துள்ளனவென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அநுர குமார திசாநாயக்க,**
சனாதிபதி

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2024, செத்தெம்பர் 27.

1A - G 42767 — 359 (2024/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அட்டவணை *(தொடர்ச்சி)*

**06. கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 58. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும்<br>59. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |

**07. மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. அரசினால் செயற்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளின் அடிப்படைக்கமையத் தாபிக்கப்பட்ட மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் தொடர்பிலான விடயங்களுடனும் நிரல் II இல் தரப்பட்டுள்ள திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் விடயங்களுடனும் தொடர்புபட்ட கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும் தொடராய்வு செய்தலும் மதிப்பிடுதலும்<br>2. அமைச்சுக்களின் விடய எல்லைக்குள் வருகின்ற பொதுமக்கள் சேவைகளை வினைத்திறமையாகவும் மனிதநேயரீதியிலும் பெற்றுக்கொடுத்தல் | 1. மகளிர் தொடர்பான தேசிய குழு<br>2. இலங்கை மகளிர் பணியகம்<br>3. நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம்<br>4. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br>5. முன் சிறுவர் அபிவிருத்தி பற்றிய தேசிய செயலகம்<br>6. தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம்<br>7. தேசிய இளைஞர் படையணி<br>8. வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவு<br>9. தலைமைத்துவ அபிவிருத்தி தேசிய நிலையம்<br>10. விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்<br>11. தேசிய விளையாட்டுத்துறை மன்றம்<br>12. தேசிய விளையாட்டுக் கல்லூரி<br>13. சுகததாச தேசிய விளையாட்டு தொகுதி அதிகாரசபை<br>14. விளையாட்டுத்துறை மருத்துவ நிறுவகம்<br>15. இலங்கையின் ஊக்கமருந்துப் பொருட்களைத் தடுப்பதற்கான முகவராண்மை நிறுவனம் | • (2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க) வீட்டு வன்முறைகள் தவிர்ப்புச் சட்டம்<br>• (2024 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க) பெண்களை வலுவூட்டும் சட்டம்<br>• (1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க)தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம்<br>• (1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) சிறுவர், இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம்<br>• (1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க) தேசிய இளைஞர் சேவை மன்றச் சட்டம்<br>• (2002 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) இளைஞர் படையணிச் சட்டம்<br>• (1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) சிறுவர், இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம்<br>• (2019 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) விளையாட்டுகள் தொடர்பிலான தவறுகளைத் தடுக்கும் சட்டம் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**07. மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்**

| *நிரல் **I*** | *நிரல் **II*** | *நிரல் **III*** |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 3. வீண்விரயம் மற்றும் ஊழலை ஒழித்துக்கட்டி அமைச்சின் பணிப்பொறுப்பு நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவும் நவீன முகாமைத்துவ முறைகளையும் தொழில்நுட்ப முறைகளையும் பயன்படுத்தி அனைத்து முறைகளையும் திட்டங்களையும் மீளமைத்தல்<br>4. மகளிர் சாசனத்தைச் செயற்படுத்துதல்<br>5. அரசாங்க அலுவல்களின்போது தீர்மானங்களை எடுத்தலும் அரசியல் துறையினுள் பெண்களின் பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிப்பதற்காக உபாயமுறைகளைத் தயாரித்தலும் செயற்படுத்துதலும்<br>6. மோதல்களினாலும் வறுமையினாலும் பாதிப்புக்குள்ளான பெண்களை வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கை எடுத்தல்<br>7. மகளிர் மற்றும் சிறுவர் துன்புறுத்தலைத் தவிர்ப்பதற்கான சட்டங்களையும் கொள்கைகளையும் வலுப்படுத்துதலும் செயற்படுத்தலும்<br>8. பால்நிலை மற்றும் ஆண் பெண் எனச் சமூகரீதியில் வேறுபடுத்திக் கருதுவதைத் தடுப்பதற்காக தற்போதுள்ள சட்டங்களைத் திருத்தம்செய்து புதிய சட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுத்தலும் செயற்படுத்துதலும்<br>9. மகளிர் அடிப்படையாகக்கொண்ட வீட்டு அலகினைப் பலப்படுத்துவதற்குரிய கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்தல் மற்றும் செயற்படுத்துதல் | | • 1973ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க) தேசிய அரசப் பேரவையின் விளையாட்டுத் துறைச் சட்டம்<br>• (1999ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க) சுகததாச தேசிய விளையாட்டுத்துறை கட்டிடத் தொகுதி அதிகாரசபைச் சட்டம்<br>• (2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) விளையாட்டு நடவடிக்கைகளின்போது ஊக்கமருந்துப் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டம்<br>• வேறேதேனும் அமைச்சரொருவரின் நோக்கெல்லையின்கீழ் குறிப்பாகக் கொண்டுவரப்படாதவையும் இங்கு I ஆம் II ஆம் நிரல்களில் குறித்துரைக்கப்பட்டவையுமான விடயங்கள் சார்ந்த வேறெல்லாச் சட்டங்களும் |

அட்டவணை *(தொடர்ச்சி)*

**07. மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்**

| *நிரல் **I*** | *நிரல் **II*** | *நிரல் **III*** |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 10. மகளிர் மற்றும் சிறுவர் நடவடிக்கைகளுக்குரிய நீடுறுதியான அபிவிருத்தி அபிலாசைகளை நிறைவேற்றல்<br>11. அரசியல் கட்டமைப்பில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை குறைந்தபட்சம் 50 சதவீதம் வரை அதிகரிப்பதற்குத் தேவையான சட்டங்கள் மற்றும் நியதிச்சட்டங்களை நடைமுறைப்படுத்தல்<br>12. பொருளாதா ரீதியில் வறுமையை ஒழிப்பதற்குத் தேவையான வரிச்சலுகை, நிதி மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.<br>13. பெண்களின் சம்பளம் பெறாத பராமரிப்பு ஊழியத்தின் சுமையை குறைத்தல்.<br>14. உடல், உள ரீதியான ஆரோக்கியமுள்ள பிள்ளைகளை உருவாக்கும் நோக்குடன் முன் சிறுவர்பராய பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வகுத்தமைத்தல்<br>15. பாதுகாப்பற்ற நிலையிலுள்ள சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச நியமங்களுக்கு இயைபானவாறு நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்<br>16. சிறுவர் பட்டயத்தை நடைமுறைப்படுத்துதல்<br>17. சிறுவர் பாதுகாப்பு நிலையத்தின் ஒழுங்குறுத்துகை<br>18. செவண சரண ஆதரிப்புப் பெற்றோர் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்<br>19. விசேட திறமைகளுடைய சிறுவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான நிதி உதவியினை வழங்குதல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**07. மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்**

| *நிரல்* ***I*** | *நிரல்* ***II*** | *நிரல்* ***III*** |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 20. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு பாகுபாடு காட்டும் மற்றும் துன்புறுத்தல் தொடர்பான விசேட சட்டங்களை மறுசீரமைத்தல்<br>21. இளம்சந்ததியினரின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் தேசிய நிகழ்ச்சித் திட்டங்களை இலக்காகக்கொண்ட உளவிருத்திச் செயற்றிட்டங்களை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல்<br>22. இளம் சமூகத்தினரை மையப்படுத்திய சர்வதேச ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்<br>23. தொழில்வாய்ப்பற்ற இளைஞர்களை மையமாகக்கொண்ட ஆக்கத்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்<br>24. இளைஞர் அமைப்புகள் தொடர்பான ஒழுங்குபடுத்தலும், அபிவிருத்தி நடவடிக்கைகளும்<br>25. இளம்வயதிலான தொழில்தேர்ச்சி, தொழில்திறமைகள், ஆக்கபூர்வமான திறமைகள் என்பவற்றுக்குச் சமூக அங்கீகாரம் கிடைக்கும் வகையில் அவர்களுக்குத் தமது ஆற்றல்களை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய வகையிலான இளைஞர் சமுதாயத்தை இலக்காகக்கொண்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல்<br>26. உள்நாட்டு வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளுக்காக பொருத்தமான வகையில் இளைஞர் மனிதவள வங்கியொன்றை ஆரம்பித்தல்<br>27. இளம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தலும் அவர்களுக்குத் தேவையான ஊக்குவிப்பையும் புதிய சந்தர்ப்பங்களையும் வழங்குவதற்காக முறைமையொன்றை அறிமுகப்படுத்திச் செயற்படுத்துதல் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**07. மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்**

| *நிரல் **I*** | *நிரல் **II*** | *நிரல் **III*** |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 28. உயர்தரம் சித்தியடைந்த போதும் அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காத இளைஞர் சமுதாயத்தை இலக்காகக் கொண்ட தொழில் தேர்ச்சியுடன் கூடிய தொழில்நுட்ப கல்வி வழங்குதல்.<br>29. தற்போது நிகழ்நிலை முறையில் அந்நிய செலாவணி உழைக்கும் சுதந்திர தொழில்சார் (Freelance)இளைஞர் யுவதிகளுக்கு உள்ள தடைகளை நீக்குதல்<br>30. இலங்கையில் விளையாட்டுத்துறையை வலுவூட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்<br>31. விளையாட்டுத்துறையில் எதிர்பார்க்கப்படும் அடைவுகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பாராட்டுக்களை வழங்குதல்<br>32. விளையாட்டுத்துறைக் கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்<br>33. இலங்கை பற்றிய பிரதிமையை சர்வதேச ரீதியிலே கட்டியெழுப்புவதற்காக விளையாட்டுத்துறையினை பயன்படுத்தக் கூடியவாறான புதிய திறமுறைகளை வகுத்தமைத்தலும் உரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலும்<br>34. வீர, வீராங்கனைகள் சர்வதேச போட்டிகளுக்கு பங்குபற்றுவதற்கான வாய்ப்புகளை வரிவுபடுத்துதல்<br>35. பொதுமக்களுடைய தேகாரோக்கிய நலனுக்கு அவசியமான வசதிகளை ஊக்குவித்தலும் கூட்டிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**07. மகளிர், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்**

| *நிரல்* ***I*** | *நிரல்* ***II*** | *நிரல்* ***III*** |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 36. விளையாட்டு மருத்துவ வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகளின்போது தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்பாட்டினைத் தவிர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | | |
| 37. விளையாட்டுக் கட்டிடத் தொகுதிகளை அபிவிருத்தி செய்தலும் முகாமை செய்தலும் | | |
| 38. விளையாட்டுச் சங்கங்கள், அமைப்புக்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளக் கூடியதாக ஊக்குவித்தல் | | |
| 39. விளையாட்டு தொடர்பில் விசேட திறமையுள்ள விளையாட்டு வீரர்களை இனம் காண்பதற்கு மற்றும் அவர்களின் பொருளாதார நிலை, போசாக்கு மற்றும் பயிற்சிக்கான உபகரணங்களை வழங்குவதற்காக பாடசாலை மற்றும் மாவட்ட ரீதியில் விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | | |
| 40. தேசிய விளையாட்டு பயிற்சிக் கல்லூரியை மையமாகக் கொண்டு 9 மாகாணங்களுக்காகவும் நவீன விளையாட்டுக் கல்லூரி வலையமைப்பை ஏற்படுத்தல் | | |
| 41. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்குரிய பணிகளும் | | |
| 42. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல் | | |